## سُوْرَةُ الْمُمْتَحِنَةِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَلٰثَ عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا عَدُوِّيْ وَعَدُوَّكُمْ اَوْلِيَآءَ تُلْقُوْنَ
اِلَيْهِمْ بِالْمَوَدَّةِ وَقَدْ كَفَرُوْا بِمَا جَآءَكُمْ مِّنَ الْحَقِّ ۚ يُخْرِجُوْنَ الرَّسُوْلَ
وَاِيَّاكُمْ اَنْ تُؤْمِنُوْا بِاللّٰهِ رَبِّكُمْ ؕ اِنْ كُنْتُمْ خَرَجْتُمْ جِهَادًا فِيْ سَبِيْلِيْ وَ
ابْتِغَآءَ مَرْضَاتِيْ ۖ تُسِرُّوْنَ اِلَيْهِمْ بِالْمَوَدَّةِ ۖ وَاَنَا اَعْلَمُ بِمَاۤ اَخْفَيْتُمْ وَمَاۤ
اَعْلَنْتُمْ ؕ وَمَنْ يَّفْعَلْهُ مِنْكُمْ فَقَدْ ضَلَّ سَوَآءَ السَّبِيْلِ ۝١ اِنْ
يَّثْقَفُوْكُمْ يَكُوْنُوْا لَكُمْ اَعْدَآءً وَّيَبْسُطُوْۤا اِلَيْكُمْ اَيْدِيَهُمْ وَاَلْسِنَتَهُمْ
بِالسُّوْٓءِ وَوَدُّوْا لَوْ تَكْفُرُوْنَ ؕ ۝٢ لَنْ تَنْفَعَكُمْ اَرْحَامُكُمْ وَلَاۤ اَوْلَادُكُمْ ۚ
يَوْمَ الْقِيٰمَةِ ۚ يَفْصِلُ بَيْنَكُمْ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ۝٣ قَدْ كَانَتْ لَكُمْ
اُسْوَةٌ حَسَنَةٌ فِيْۤ اِبْرٰهِيْمَ وَالَّذِيْنَ مَعَهٗ ۚ اِذْ قَالُوْا لِقَوْمِهِمْ اِنَّا
بُرَءٰٓؤُا مِنْكُمْ وَمِمَّا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ۫ كَفَرْنَا بِكُمْ وَبَدَا بَيْنَنَا
وَبَيْنَكُمُ الْعَدَاوَةُ وَالْبَغْضَآءُ اَبَدًا حَتّٰى تُؤْمِنُوْا بِاللّٰهِ وَحْدَهٗۤ اِلَّا
قَوْلَ اِبْرٰهِيْمَ لِاَبِيْهِ لَاَسْتَغْفِرَنَّ لَكَ وَمَاۤ اَمْلِكُ لَكَ مِنَ اللّٰهِ
مِنْ شَيْءٍ ؕ رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَاِلَيْكَ اَنَبْنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ ۝٤

معانقة ۱۲ العلماء الوقف على القيمة ۱۲
عند المتاخرين ۱۲

அத்தியாயம் : 60

## அல் மும்தஹினா — சோதிப்பவள்

வசனங்கள் : 13 மதனீ ருகூஃகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. விசுவாசங்கொண்டோரே! என்னுடைய விரோதியையும், உங்களுடைய விரோதியையும் அவர்கள்பால் (உங்கள்) நேசத்தைச் சேர்த்து வைக்கின்ற நண்பர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; (ஏனென்றால்) சத்தியத்திலிருந்து உங்களிடம் வந்த(வேதத்)தை திட்டமாக அவர்கள் நிராகரித்தும் விட்டனர்; உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்வை நீங்கள் விசுவாசித்ததற்காக (நம்முடைய) தூதரையும், உங்களையும் உங்கள் இல்லங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள்; (விசுவாசிகளே!) என் பாதையில் ஜிஹாது செய்வதற்காகவும், என் பொருத்தத்தைத் தேடியும் நீங்கள் வெளியேறி விடுவீர்களாயின் (அவர்களை நண்பர்களாக எடுத்துக் கொள்ளவேண்டாம்; ஆனால் நீங்களோ) அவர்கள் பால் நேசத்தின் காரணமாக (செய்திகளை) மறைமுகமாகச் சேர்த்து வைக்கிறீர்கள்; நீங்கள் (உங்கள் மனதில்) மறைத்துவிட்டதையும், (அதற்கு மாறாக) நீங்கள் வெளிப்படுத்திவிட்டதையும் நானோ நன்கறிவேன். இன்னும் உங்களில் யார் இதைச் செய்கின்றாரோ அவர் நேரானபாதையைத் திட்டமாக தவறவிட்டுவிட்டார்.

2. அவர்கள் உங்களை கண்டால் (பகிரங்கமாகவே) அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகி விடுவார்கள் ; மேலும் , (போர் செய்ய) உங்கள்பால் தங்கள் கைகளையும் , தங்கள் நாவுகளையும் தீமையைக் கொண்டு நீட்டுவார்கள் ; அன்றியும் , நீங்கள் (அவர்களைப் போன்று) நிராகரிப்போராகிவிட வேண்டுமென அவர்கள் ஆசைப்படுவார்கள்.

3. உங்களுடைய உறவினர்களும், உங்களுடைய பிள்ளைகளும் மறுமை நாளில் உங்களுக்கு பலனளிக்கவேமாட்டார்கள்; (அந்நாளில் அல்லாஹ்) உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்; மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்க்கிறவன்.

4. இப்றாஹீமிலும், அவருடன் இருந்தவர்களிலும் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி திட்டமாக இருக்கின்றது; அவர்கள் தம் சமூகத்தாரிடம், " நிச்சயமாக நாங்கள் உங்களிலிருந்தும், அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்கிக்கொண்டிருப்பவற்றிலிருந்தும் நீங்கி,உங்களை நாங்கள் நிராகரித்து விட்டோம். இன்னும் அல்லாஹ் ஒருவனையே நீங்கள் விசுவாசங்கொள்ளும் வரை எங்களுக்கும், உங்களுக்குமிடையில் விரோதமும், வெறுப்பும் என்றென்றும் வெளிப்பட்டுவிட்டது" என்று கூறியபொழுது இப்றாஹீம் தன் தந்தையிடம் "உமக்காக நிச்சயமாக நான் மன்னிப்புத்தேடுவேன்; மேலும் அல்லாஹ்விடமிருந்து எதையும் நான் உமக்கு உடமையாக்கிக்கொள்ளமாட்டேன்" என்ற கூற்றைத்தவிர,(மற்றதில் உங்களுக்கு முன்மாதிரி உண்டு. மேலும் இப்றாஹீம், ) "எங்கள் இரட்சகனே! (எங்கள் காரியங்களை உன்னிடம் ஒப்படைத்து முழுமையாக) உன் மீது நம்பிக்கை வைத்தோம்; இன்னும் உன்பக்கமே நாங்கள் மீண்டோம் ; அன்றியும் உன் பக்கமே திரும்புதல் இருக்கிறது(என்றும்),

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا وَاغْفِرْ لَنَا رَبَّنَا ۚ اِنَّكَ اَنْتَ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٥﴾ لَقَدْ كَانَ لَكُمْ فِيْهِمْ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ
ع يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ ؕ وَمَنْ يَّتَوَلَّ فَاِنَّ اللّٰهَ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿٦﴾
عَسَى اللّٰهُ اَنْ يَّجْعَلَ بَيْنَكُمْ وَبَيْنَ الَّذِيْنَ عَادَيْتُمْ مِّنْهُمْ مَّوَدَّةً ؕ
وَاللّٰهُ قَدِيْرٌ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٧﴾ لَا يَنْهٰىكُمُ اللّٰهُ عَنِ الَّذِيْنَ لَمْ
يُقَاتِلُوْكُمْ فِي الدِّيْنِ وَلَمْ يُخْرِجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ اَنْ تَبَرُّوْهُمْ وَ
تُقْسِطُوْا اِلَيْهِمْ ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ ﴿٨﴾ اِنَّمَا يَنْهٰىكُمُ اللّٰهُ عَنِ
الَّذِيْنَ قٰتَلُوْكُمْ فِي الدِّيْنِ وَاَخْرَجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ وَظٰهَرُوْا عَلٰۤى
اِخْرَاجِكُمْ اَنْ تَوَلَّوْهُمْ ۚ وَمَنْ يَّتَوَلَّهُمْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿٩﴾
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا جَآءَكُمُ الْمُؤْمِنٰتُ مُهٰجِرٰتٍ فَامْتَحِنُوْهُنَّ ؕ
اَللّٰهُ اَعْلَمُ بِاِيْمَانِهِنَّ ۚ فَاِنْ عَلِمْتُمُوْهُنَّ مُؤْمِنٰتٍ فَلَا تَرْجِعُوْهُنَّ
اِلَى الْكُفَّارِ ؕ لَا هُنَّ حِلٌّ لَّهُمْ وَلَا هُمْ يَحِلُّوْنَ لَهُنَّ ؕ وَاٰتُوْهُمْ مَّاۤ
اَنْفَقُوْا ؕ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ اَنْ تَنْكِحُوْهُنَّ اِذَاۤ اٰتَيْتُمُوْهُنَّ اُجُوْرَهُنَّ ؕ
وَلَا تُمْسِكُوْا بِعِصَمِ الْكَوَافِرِ وَسْـَٔلُوْا مَاۤ اَنْفَقْتُمْ وَلْيَسْـَٔلُوْا مَاۤ
اَنْفَقُوْا ؕ ذٰلِكُمْ حُكْمُ اللّٰهِ ؕ يَحْكُمُ بَيْنَكُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿١٠﴾

5. " எங்கள் இரட்சகனே! நீ எங்களை நிராகரிப்போருக்குச்சோதனையாக ஆக்கிவிடாதே! எங்கள் இரட்சகனே! எங்களை நீ மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக நீதான் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்" (என்றும் பிரார்த்தித்தார்).

6. உங்களில் எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் ஆதரவுவைக்கின்றாரோ அவருக்கு, திட்டமாக அவர்களில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது; இன்னும், எவர் (ஏற்காது)புறக்கணித்து விடுகிறாரோ, அப்பொழுது (அவரே இழப்பிற்குரியவர்; ஏனெனில் அகிலத்தாரை விட்டும்) நிச்சயமாக அல்லாஹ் _ அவனே தேவையற்றவன், புகழ்மிக்கவன்.

7. உங்களுக்கும், அவர்களிலிருந்து நீங்கள் விரோதித்திருக்கின்றீர்களே அத்தகையோருக்குமிடையில், அல்லாஹ் நேசத்தை ஏற்படுத்திவிடக்கூடும்; (இதற்கு) அல்லாஹ்வோ ஆற்றலுடையோன்! மேலும், அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

8. (விசுவாசிகளே!) மார்க்க(விஷய)த்தில் உங்களுடன் எதிர்த்துப் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அத்தகையோருக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்கள்பால் நீங்கள் நீதமாக நடந்துகொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை; நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்வோரை நேசிக்கிறான்.

9. அல்லாஹ் உங்களைத் தடுப்பதெல்லாம், மார்க்க(விஷய)த்தில் உங்களுடன் போர் புரிந்து, உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றி, உங்களை வெளியேற்றுவதில் (விரோதிகளுக்கு) உதவியும் செய்தார்களே அத்தகையோரை நீங்கள் சிநேகிதர்களாக ஆக்கிக்கொள்வதைத்தான்; ஆகவே, எவர்கள் அவர்களை நேசர்களாக ஆக்கிக் கொள்கிறார்களோ அவர்கள்தான் அநியாயக்காரர்களாவர்.

10. விசுவாசங்கொண்டோரே! விசுவாசிகளான பெண்கள் ஹிஜ்ரத்துச் செய்தவர்களாக உங்களிடம் வந்தால் அவர்களைச் சோதித்துப்பாருங்கள்; அவர்களுடைய விசுவாசத்தை அல்லாஹ் மிக அறிந்தவன்; ஆகவே, (நீங்கள் சோதித்ததில்) அவர்களை விசுவாசிகளான பெண்கள்தாம் என்று நீங்கள் அறிந்தால், அவர்களை நிராகரிப்போரிடம் திருப்பி அனுப்பி விடாதீர்கள்; (ஏனென்றால் இஸ்லாத்திற்கு வந்த பெண்களாகிய)அவர்கள், அவர்களுக்கு (மனைவியராக இருக்க) ஆகுமானவர்களல்லர்; அவர்களும் இவர்களுக்கு(க் கணவர்களாக இருக்கவும்) ஆகுமானவர்களல்லர்; (எனினும், இப்பெண்களுக்காக) அவர்கள் செலவு செய்திருந்ததையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்; நீங்கள் அவர்களுக்கு அவர்களுடைய மஹர்களைக் கொடுத்துவிடுவீர்களானால் அவர்களை நீங்கள் திருமணம் செய்துகொள்வதும் உங்கள் மீது குற்றமில்லை; மேலும், விசுவாசங் கொள்ளாத அவர்களின் விவாக பந்தங்களை நீங்கள் பற்றிப்பிடிக்கவேண்டாம்; (அவர்களின் பந்தங்களை நீக்கி விவாகரத்துச் செய்து விடுங்கள்; அவர்களுக்காக) நீங்கள் செலவு செய்ததையும் (அப்பெண்கள் சென்றிருக்கும் நிராகரிப்போரிடம்) கேளுங்கள்; ( உங்களிடம் வந்துவிட்ட அவர்களுடைய மனைவியருக்குத்) தாங்கள் செலவு செய்ததையும் அவர்கள் (உங்களிடம்) கேட்கட்டும்; இது அல்லாஹ்வுடைய தீர்ப்பாகும்; அவன் உங்களுக்கிடையில் (நீதமாகவே) தீர்ப்பளிக்கிறான்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

وَاِنۡ فَاتَكُمۡ شَىۡءٌ مِّنۡ اَزۡوَاجِكُمۡ اِلَى الۡكُفَّارِ فَعَاقَبۡتُمۡ فَاٰتُوا
الَّذِيۡنَ ذَهَبَتۡ اَزۡوَاجُهُمۡ مِّثۡلَ مَاۤ اَنۡفَقُوۡا ؕ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىۡۤ
اَنۡتُمۡ بِهٖ مُؤۡمِنُوۡنَ ﴿۱۱﴾ يٰۤاَيُّهَا النَّبِىُّ اِذَا جَآءَكَ الۡمُؤۡمِنٰتُ يُبَايِعۡنَكَ
عَلٰٓى اَنۡ لَّا يُشۡرِكۡنَ بِاللّٰهِ شَيۡـًٔا وَّلَا يَسۡرِقۡنَ وَلَا يَزۡنِيۡنَ وَلَا
يَقۡتُلۡنَ اَوۡلَادَهُنَّ وَلَا يَاۡتِيۡنَ بِبُهۡتَانٍ يَّفۡتَرِيۡنَهٗ بَيۡنَ
اَيۡدِيۡهِنَّ وَاَرۡجُلِهِنَّ وَلَا يَعۡصِيۡنَكَ فِىۡ مَعۡرُوۡفٍ فَبَايِعۡهُنَّ
وَاسۡتَغۡفِرۡ لَهُنَّ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ ﴿۱۲﴾ يٰۤاَيُّهَا الَّذِيۡنَ
اٰمَنُوۡا لَا تَتَوَلَّوۡا قَوۡمًا غَضِبَ اللّٰهُ عَلَيۡهِمۡ قَدۡ يَـئِسُوۡا مِنَ
الۡاٰخِرَةِ كَمَا يَـئِسَ الۡكُفَّارُ مِنۡ اَصۡحٰبِ الۡقُبُوۡرِ ﴿۱۳﴾ ع
الممتحنة ع ٢ ٨

## سُوۡرَةُ الصَّفِّ مَدَنِيَّةٌ وَهِيَ اَرۡبَعَ عَشۡرَةَ اٰيَةً وَّفِيۡهَا رُكُوۡعَانِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ
سَبَّحَ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الۡاَرۡضِ ۚ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۱﴾
يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لِمَ تَقُوۡلُوۡنَ مَا لَا تَفۡعَلُوۡنَ ﴿۲﴾ كَبُرَ مَقۡتًا
عِنۡدَ اللّٰهِ اَنۡ تَقُوۡلُوۡا مَا لَا تَفۡعَلُوۡنَ ﴿۳﴾ اِنَّ اللّٰهَ يُحِبُّ الَّذِيۡنَ
يُقَاتِلُوۡنَ فِىۡ سَبِيۡلِهٖ صَفًّا كَاَنَّهُمۡ بُنۡيَانٌ مَّرۡصُوۡصٌ ﴿۴﴾

11. உங்கள் மனைவியரிலிருந்து (மதம்மாறி) எவரேனும் உங்களைவிட்டும் நிராகரிப்பவர்கள்பால் தப்பிச்சென்றுவிட்டால், பின்னர் நீங்கள் (அவர்களுடன் போர்செய்து அவர்களிடமிருந்து) போர்ப் பொருள்களை அடைந்தால், எவர்களின் மனைவியர்கள் சென்றுவிட்டனரோ அவர்களுக்கு அவர்கள் செலவு செய்தது போன்றதைக் கொடுத்துவிடுங்கள்; மேலும், எவனை நீங்கள் விசுவாசம் கொண்டுள்ளீர்களோ அத்தகைய அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.

12. நபியே! "அல்லாஹ்விற்கு எப்பொருளையும் அவர்கள் இணை வைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபச்சாரம் செய்வதில்லை என்றும், தங்கள் (பெண்) பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை என்றும், தங்களுடைய கைகளுக்கும் தங்கள் கால்களுக்குமிடையில் எதனை அவர்கள் கற்பனை செய்கிறார்களோ அவ்வாறான அவதூறை இட்டுக்கட்டுவதில்லை என்றும், நன்மையானவற்றில் உமக்கு மாறு செய்வதுமில்லை என்றும் உம்மிடம் வாக்குறுதி (பைஅத்து) செய்ய விசுவாசிகளான பெண்கள் உம்மிடம் வந்தால், அவர்களுடன் நீர் வாக்குறுதி செய்து கொள்வீராக! இன்னும், நீர் அவர்களுக்காக அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக்கிருபையுடையவன்.

13. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ் எவர்கள் மீது கோபம் கொண்டுவிட்டானோ அந்த சமூகத்தாரை நீங்கள் நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள். (ஏனெனில்) மண்ணறைவாசிகளைப் பற்றி (அவர்கள் திரும்பி வர மாட்டார்களென) நிராகரிப்போர் நம்பிக்கையிழந்தவாறே, மறுமையைப்பற்றி நிச்சயமாக இவர்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர்.

---

அத்தியாயம் : 61

## அஸ்ஸஃப் _ அணிவகுப்பு

வசனங்கள் : 14 மதனீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன. அவனே (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

2. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள்.

3. நீங்கள் செய்யாததை(ப்பிறருக்குச்செய்ய)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப்பெரிதாகிவிட்டது.

4. (விசுவாசிகளே!) நிச்சயமாக அல்லாஹ்: ஒன்றோடொன்று இணைந்(து அசையா)திருக்கும் கட்டிடத்தைப் போன்று அணியில் (இருந்து புறமுதுகிடாது) நின்றவர்களாக அவனுடைய பாதையில் யுத்தம் புரிகிறார்களே அத்தகையோரை நேசிக்கின்றான்.